[1982 மார்ச் 1

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி மற்றும் ஸ்ரீபெரும்புதூர், வாலாஜாபாத் ஒன்றியங்களில் உள்ள 21 குடியிருப்புகளுக்கும் பாலாற்றைத் தலைப்பிடமாகக் கொண்டு குடிநீர் வழங்க ஒரு ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி தனது பங்குத் தொகையை ஏற்க ஒப்புதல் அளிப்பதில் காலதாமதமாயிற்று. தற்பொழுது திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்பட்ட காலதாமதத்தைப் போக்க, இனிமேல் எவ்வளவு விரைவில் அந்தத் திட்டம் அந்த மக்களுக்கு கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மிக விரைவில் ஒப்புதல் அளிக்கப்படும்.

பணியில் இருக்கும்போது இறந்துவிடும் தொழிலாளியின் ஈமச் சடங்கிற்கான நிதி உதவி.

*வினா எண் 292—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பணியில் இருக்கும்போது இறந்துவிடும் தொழிலாளியின் ஈமச்சடங்கிற்காக அவரது வாரிசுதாரருக்கு தொழிலாளர் நல வாரியம் உதவித் தொகை வழங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், வழங்கப்படும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ஒரு தொழிலாளிக்கு ரூபாய் 200 வீதம் தரப்படுகின்றது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, எந்த ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்ற விவரத்தையும் இந்தக் காரியங்களுக்கு இந்தத் தொழிலாளர் நல வாரியம் இதுவரை எவ்வளவு தொகை வழங்கி இருக்கின்றது என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

1982 மார்ச் 1]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 8—12—1980 அன்று நடைபெற்ற அந்த வாரியத்தின் 16-வது கூட்டத்தில் பணியில் இருக்கும்போது தொழிலாளி இறந்துவிட்டால் ஈமச் சடங்குக்காக ரூபாய் 200-ஐ சட்டபூர்வமான வாரிசுதாரருக்குக் கொடுக்கவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. இதுவரை 283 மனுக்கள் வந்திருந்ருக்கின்றன. 152 மனுக்களுக்கு 30,400 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் 131 மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, இறந்துவிட்ட தொழிலாளியின் ஈமச்சடங்கிற்காக 200 ரூபாய் தரப்படுகின்றது என்று சொல்கிறார்கள். தற்போதுள்ள நிலைமையில் அந்தத் தொகையை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதற்கென ஒரு வாரியம் இருக்கின்றது, அந்த வாரியத்தின் தலைவன் நான். அதிலுள்ள உறுப்பினர்கள் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அந்த உறுப்பினர்கள் இதைப்பற்றி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வாரியக் கூட்டத்தில் தீர்மானம் கொண்டு வந்தால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, ஈமச் சடங்குக்காகக் கொடுக்கப்படக்கூடிய பணத்தைப் பொறுத்தவரையில் அவர்களிடத்திலிருந்து விண்ணப்பம் வந்து அதுபற்றி பரிசீலனையில் இருக்கின்றது என்று சொன்னால், இறந்தவருக்கு ஈமச்சடங்குகள் முடிந்துவிட்டிருக்குமே, அப்படியானால் அந்தத் தொகை ஈமச் சடங்குக்குப் பயன்படாமல் போகக் கூடிய நிலைமை இருக்கின்றதல்லவா ? அப்படியானால் அந்த ஈமச்சடங்குகளை கடன்பட்டுத்தானே நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கும். ஆகவே இறந்த உடனே முழுப்பணமும் அவர்களுக்குக் கொடுக்க முடியாவிட்டால் அதிலே ஒரு குறிப்பிட்ட தொகையினையாவது கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அல்லது முழுத் தொகையையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளி தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிக்கு ஆண்டுதோறும் சந்தாத்தொகை செலுத்துபவராக இருக்கவேண்டும். வேலை கொடுப்பவர் ரூ. 200-ஐ இறந்துவிட்ட தொழிலாளியின் வாரிசிடம் கொடுத்துவிட்டு அத்தொகையைப் பெற்றுக்கொண்டதற்கான அத்

தாட்சிக் கடிதமாக வருவாய் தபால் தலை ஓட்டி கையொப்ப மிட்ட ரசீதினை செயலாளர், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு அனுப்பினாலும் பணம் கொடுக்கப்படும். அல்லது ஒரு தொழிற்சங்கம் இறந்தவரின் குடும்பத்திற்கு 200 ரூபாய் கொடுத்துவிட்டு அவ்வாறு கொடுத்துவிட்டேன் என்ற செய்தியை வாரியத்திற்குத் தெரிவித்தாலும் பணம் கொடுக்கப்படும். அல்லது தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களில் ஒருவர் பணம் செலவு செய்திருக்கிறார்கள் என்ற அத்தாட்சியினைக் கொடுத்தாலும் பணம் கொடுக்கப்படும். ஆகவே அவ்வாறு நானே இறந்தவரின் குடும்பத்தினருக்கு பணம் கொடுத்திருக்கிறேன் என்ற அத்தாட்சியினை அனுப்பினால் பணத்தை உடனே அனுப்புகிறோம். ஆனால் இதைவிடச் சுலபமான ஒரு வழி இருந்து அதைப் பின்பற்றவேண்டுமென்றால் அதைப்பற்றி வாரியம் பரிசிலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, பணியில் இருக்கின்ற தொழிலாளி இறந்துவிட்டால் ஈமச்சடங்குகாக 200 ரூபாய் கொடுப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் தற்போது 131 மனுக்கள் பரிசீலனையில் இருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது என்ன பரிசீலனை ? இறந்துவிட்டாரா அல்லது இறக்கவில்லையா என்பது பற்றிய பரிசீலனையா ?. ஒருவர் இறந்துவிடாத சூழ்நிலையில் மனுப் போடுவதில்லை என்று நான் நினைக்கிறேன். ஆகவே இதிலே காலதாமதப்படுத்த வேண்டியதற்கான காரணம் என்ன ? உடனடியாக அந்தத் தொகையினைக் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இறந்தவுடனே பணத்தைச் செலவு செய்து விடுகிறார்கள். தொழிற்சங்கம் சார்பாகவும் செலவு செய்யலாம். முதலாளியும் செலவு செய்யலாம். அவ்வாறு செலவு செய்திருக்கிறோம் என்ற அத்தாட்சியை சென்னைக்கு அனுப்பிய பிறகு அதைப் பரிசீலனை செய்து பின்னர் பணம் கொடுக்கப்படுகின்றது. ஆனால் இதைவிட ஒரு நல்ல சுருக்கமான வழி ஏதாவது இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களேயானால் அதுபற்றி நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.